# ஆத்மஜோதி

17-9-70




ஆத்மஜோதி நிலயம், நாவலப்பிட்டி, இலங்கை.



ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே. - சுத்தானந்தர்

ஜோதி 22 | சாதாரண ஸ்ரீ புரட்டாதி மீ 1ம் உ [17-9-70] | சுடர் 11

# பொருளடக்கம்


இவர் சைவர் என்பவர் 321
கபீர் அருள்வாக்கு 322
ஆண்டவன் முன்பு... 323
பாரசீகத்தின் பரம ஞானி 327
அப்பர் அருளமுதம் – 11 334
இயற்கையே சோதிடம் 337
பட்டமரம் தளிர்த்த விந்தை 340
மக்களினம் ஒன்றே 341
நெஞ்சம் ஓர் புதையல் 344
அருட்பா தந்தருளிய அற்புதமனிதர் 349


## ஆத்மஜோதி சந்தா விபரம்



ஆயுள்சந்தா 100-00
வருட சந்தா 5-00
தனிப்பிரதி சதம் 50

கௌரவ ஆசிரியர் திரு. க. இராமச்சந்திரா

பதிப்பாசிரியர் திரு. நா. முத்தையா

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி போன்: 353

# இவர் சைவர் என்பவர்

''மானுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக்காயத்து,
ஆனிடத் தைந்தும் ஆடும் அரன்பணிக்காக அன்றோ''

என்பது சிவஞான சித்தியார். அந்தணர் குலத்தில் பிறந்த ஒருவர் உபநயனம் (பூணூல் தரித்தல்) பெற்ற பின்னரே அந்தணர் ஆவர். இதுபற்றியே அந்தணர் இரு பிறப்பாளர் எனப்படுவர். அதுபோல் சைவசமய மரபிலே பிறந்த ஒவ்வொருவரும் ஒன்பது அல்லது பதினொன்று, பன்னிரண்டு வயதினுள் சிவாகம விதிப்படி சிவதீட்சையைப் பெற்ற பின்னரே அவர் சைவர் ஆவர். அவரே சிவத்தொண்டு புரிவதற்கும் உரியவர் ஆவர். சிவதீட்சை பெறாதவர் சைவமரபில் வந்தவர் ஆனாலும் அவர் சைவர் எனப்படார். சிவதீட்சையுடன் விபூதி உருத்திராட்சம் அணிந்து இயன்ற சிவத்தொண்டுகளைச் செய்கின்றவரே உண்மைச் சைவர் எனக்கூறப்பெறுவர்.

கொலை, களவு, சூது, காமம், பொய், கள்ளுண்டல் முதலாய குற்றங்கள் இன்றி, நல்லொழுக்கம், அன்பு, அருள், பக்தி, உண்மை முதலியன உடையவரே சிவதீட்சையைப் பெறுவதற்கு அருகராவர். எக்குலத்தவராயினும் சிவதீட்சை பெற்று சைவ ஒழுக்கத்தில் நின்று சிவபெருமானை வழிபடுபவர் சைவர் ஆவர் என்பது நூற்றுணிபு.

''சைவசமயமே சமயம்'' எனவும் ''சைவத்தின் மேற் சமயம் வேறிலை'' எனவும் ஆன்றோர் கூறும் சைவசமயத்தில் நின்று அச்சமயத்தில் பெறுவதாகிய சிவதீட்சையைப் பெற்றவர் ஆயுள்வரை அனுட்டானம், பஞ்சாட்சர ஜெபம், இறைபணி, திருமுறைப்பாராயணம் முதலிய செயல்களைச் செய்வதற்கு உரியவராவர். சிவதீட்சையின்றி அனுட்டானம் முதலியவற்றைச் செய்வோருக்குப் புத்திமுத்தி சித்தியாது எனவும் சைவசமய நெறியில் நின்று சைவானுட்டானங்களைத் தவறாமல் அனுட்டித்தவர் சிவத்துவ விளக்கம் பெற்றுப் பிறவாநெறியை அடைவர் எனவும் சிவாகமம் கூறும்.

—சைவானுட்டான விளக்கம்

# கபீர் அருள் வாக்கு

## உபதேசம்

உனக்கு முன் தெளித்தவனுக்கு நீ மலரைத் தெளி. உனக்குப் பூவுக்குப் பூ; அவனுக்குத் திரிசூலம் ஆகிவிடும் அதாவது முக்கூர் முள்ளாகிவிடும்.

★★

பலம் குறைந்தவனைத் தொந்தரவுக் குள்ளாக்காதே. அவன் பெருமூச்சு மிகவும் வலிவு வாய்ந்தது. உயிரில்லா ததின் (கருமான் துருத்தியின்) மூச்சிலேயே இரும்பு சாம் பலாகிவிடுகிறது.

★★

கபீர் சொல்லுகிருர். நான் ஏமாந்தாலும் பிறரை ஒரு வரும் ஏமாற்ருதீர். நாம் ஏமாந்தால் (பிறருக்காவது) சுகம் ஏற்படும். பிறரை ஏமாற்றினுல் (நமக்கு) துக்கம்தான் ஏற் படும்.

★★

இந்த உலகத்தில் வந்த நீ முறுக்குவதை (செருக்குப் பிணக்கை) விட்டுவிடு. எடுத்துக்கொள்ள வேண்டும் என் ருல் எடுத்துக்கொள். சந்தை கலையப்போகிறது.

★★

தான் என்ற முனைப்பு நீங்கிச் சொற்களைப் பேசு. (அப் பேச்சு) மற்றவரையும் குளிரச் செய்யட்டும். உனக்கும் தண்மை தரட்டும்.

★★

மனது குளிர்ந்திருந்தால் உலகத்தில் எதிரி ஒருவரும் இல்லை. இந்தத் 'தான்' என்கிற கர்வத்தை விடு. எல்லோ ரும் அன்புகொள்வார்கள்.

# ஆண்டவன் முன்பு சதா வாழப் பழகுதலே அரிய சாதனையாகும்.

( ஆசிரியர் )

" மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம் "
" மனம் போல வாழ்வு "
" மனம் போல மாங்கல்யம் "
" உள்ளத்தனையது உயர்வு "

என்பவை நாம் தினமும் சிந்திக்க வேண்டியவையாகும். மனத்தைத் தினமும் எதில் பழக்குகிறோமோ அது அதிலே பழகுகின்றது. காலகதியில் அப்பழக்கத்திலேயே படிந்து விடுகின்றது.

இறைவனைப் பிரிந்து பலகோடி பிறவிகள் எடுத்து விட்டோம். இறைவனை மறுபடியும் சேர்வதற்கு முயன்று கொண்டிருக்கின்றோம். அதற்குத் தீவிர சாதனை அவசியம். ஆண்டவன் எங்கும் உள்ளான் என்ற உணர்வும், நம்பிக்கையும் முதலில் அவசியம். அவ்வுணர்வினால் நாம் ஆண்டவன் முன்னிலையில் எப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்ற மனோபாவனையை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஆத்ம சாதனைகளில் ஈடுபடுவார் யாவருக்கும் இப்பழக்கம் மிகமிக அவசியமாகும்.

ஆண்டவனை உள்ளும் புறமும் கண்டு அநுபவித்து வாழ்ந்தனர் பெரியோர்கள்.

" புறம் புறந்திரிந்த செல்வமே சிவபெருமானே "
" தேடித் தேடொணாத் தேவனை என்னுளே
தேடிக் கண்டு கொண்டேன் "
" நினையாதொருபோதும் இருந்தறியேன் "
" நினைப்பவர் நெஞ்சம் கோயிலாக் கொண்டவன் "
" கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன் "

இவை எமது சாதனைக்கு நல்ல விருந்தாகும். நாம் கண்ணைத் திறந்து கொண்டிருக்கும்போது நம்முன் அவர் இருப்பதை உணரலாகும். நாம் கண்ணை மூடிக்கொண்டு உள்ளே நோக்கும்போது அவர் நம்முள் இருப்பதையும் உணரலாம். ஆனால் அவரைக் காணுதற்கு ஊனக்கண் போதாது. ஞானக்கண் வேண்டும். குருவின் கருணையினாலும் எமது பக்தி வைராக்கிய முயற்சியினாலும் தான் இறைதரிசனம் நமக்குக் கிடைக்கும்.

திரைமறைவிலிருக்கும் உயர்குலப் பெண்கள் திரையின் துவாரத்திற்கூடாக உலகத்தவரைப் பார்ப்பர். உலகத்தவரோ அவர்களைப் பார்க்க முடியாது. அதுபோல ஆண்டவன் நம்மை எப்போதும் பார்த்துக் கொண்டிருக்கிறார். நாமோ ஆண்டவனைப் பார்ப்பதில்லை. ஆண்டவன் நம்மை எப்போதும் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்ற உணர்ச்சியே நமக்கு முதலில் தேவையானதாகும். இதைக் குறித்தே கண்ணன் கீதையில் அர்ச்சுனனுக்கு ‘ எல்லாக் காலங்களிலும் என்னை நினைப்பாயாக! ’ என்று போதித்தார்.

நமக்கு வேண்டுவதெல்லாம், பகவான் முன்பு நாம் உண்மையாக இருப்பதான ஒரு நம்பிக்கையே, அதாவது அவர்மீது செலுத்தும் இயல்பான அன்பே. அன்பை நம் உள்ளத்திலே ஊறச் செய்வதற்கு ஓர் உறவு எப்போதும் இன்றியமையாததாகும். ஆண்டவனை நமக்குத் தந்தையாராகவோ, எஜமானராகவோ, தோழராகவோ, தாயாராகவோ, தமையனாராகவோ எண்ணிக் கொள்ளலாம் எந்த உறவு நமக்கு மிக இனிப்பாயும் இயல்பாயும் ஏற்படுமோ அதையே பூணுதல் நன்று.

அன்பு நிலைத்தற்காகவும், வளர்தற்காகவும், அன்பை ஈனும் உறவுணர்ச்சியை வலுப்படுத்துதற்காகவும் அன்பு பணியாக உருவெடுக்க வேண்டும். எவரிடத்தில் நமக்கு மெய்யான அன்பு உதிக்குமோ, அப்போது நாம் அவர்க்குப் பிரியமான குற்றேவல்களையும், பணிவிடைகளையும்

செய்வதில் மிக மகிழ்வோம். உள்ளத்தில் அன்பு ஊறும் போது, தானுக இயல்பாக அகமகிழ்ச்சியோடும், முகமலர்ச்சியோடும், அன்பைப் பெறுவார்க்கு வேண்டிய செயல்களை யெல்லாம் செய்யும் ஊக்கம் – அவர்க்காகவே வாழும் ஊக்கம் - பெருகும். இம்மாதிரியான அன்பினுலன்ருே இலக்குமணன் ஈரேழ் ஆண்டுகள் இராமபிரானுக்கு எல்லாப் பணிகளையும் இயற்றியதுமன்றி, பெறற்கரிய பெரும்பேருக அதனைக் கருதுவானுயினன்.

நாம் இறைவனுகிய கற்பக தருவின் கீழே இருக்கின்ருேம். நாம் எதை நினைக்கின்ருேமோ, அக் கற்பகதரு அதனைக் கொடுத்துக் கொண்டே இருக்கின்றது. நல்லதை நினைத்தால் நல்லதைக் கொடுக்கிறது. தீயதை நினைத்தால் தீயதைக் கொடுக்கிறது. ஆகவேதான் நல்லதும் தீயதும் நம் கையிலே இருக்கிறது எனப் பெரியோர் கூறுவர்.

நாம் அறிந்தாலும் அறியாவிடினும் பகவானது அருளாலன்றி எதனையும் செய்ய இயலாதவராவோம் என்பது உண்மையே. 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்ற பழமொழி பரம்பொருளை நேரிற்கண்டு அனுபவித்த பெரியோர்களது வாக்காகும். கூத்து நடக்கும் மேடையிலே பொம்மைகள் ஆடும்போது அவை தாமாக ஆடுவதுபோல் வெளிப்பார்வைக்குத் தோன்றுகின்றன. ஆனுல் அப்பொம்மைகட்கும் பின்புறத்தே அவற்றைக் கட்டி இழுத்து வேண்டியவாறு ஆட்டிவைக்கும் ஒரு மனிதன் திரைமறைவிலே உள்ளான். அதுபோல நம்மைத் தாம் நினைத்தவாறு ஆட்டிவைக்கும் கடவுளும் கண் மறைவாக உள்ளார். அவரது சங்கற்ப சக்தியே நம்மை உள்ளிருந்து இழுத்து நினைத்தபடியே ஆட்டுவிக்கின்றது.

**"என் செயலாவது யாதொன்றுமில்லைத் தெய்வமே**
**உன் செயலேயென்று உணரப் பெற்றேன்"**

இவ் வாக்கு ஆழ்ந்து சிந்தித்தற்குரிய தொன்ருகும். நாம்

இறைவனது அருளுக்குக் கருவியாகும்போது, நம்மிடத்துள்ள எச்செயலும் அந்த அருளின் வடிவமாகவே அமைகிறது. நமது வாழ்விலுள்ள மிக அற்பமான செயலைச் செய்யவும் தெய்வ அருளின் சிறப்பான துணை இன்றியமையாதது, ஆதலால் அவரைப் பற்றிய நினைவும், அவர் முன்பு நாம் அமர்ந்திருக்கும் நினைவும் அவசியமாகும்.

★★
★★

## மணி மொழிகள்.

★ சிந்திக்க நேரத்தை எடுத்துக் கொள்; அதுவே சக்தியின் உற்பத்தி ஸ்தானம்.

★ விளையாடக் காலத்தைச் செலவிடு; அதுவே நிரந்தர இளமையுடன் வாழும் இரகசியம்.

★ படிக்க நேரத்தை எடுத்துக் கொள்; அதுவே விவேகத்தின் மூலம்.

★ அன்புசெய்து அன்பைப் பெறக் காலத்தைச் செலவிடு; அதுவே கடவுள் அளித்த சலுகை.

★ நட்புக்காக நேரத்தைச் செலவிடு; அதுவே ஆனந்தத்துக்கு வழி.

★ சிரிக்க நேரத்தைச் செலவிடு; அதுவே ஆத்மாவின் இசை.

★ கொடுக்கக் காலத்தைச் செலவிடு; அதுவே ஒரு நாளின் தன்னலமற்ற செயலுக்குக் கொடுத்த அவகாசம்.

★ உழைக்கக் காலத்தைச் செலவிடு; அதுவே வெற்றியின் விலை.

— ஒரு ஞானி —

# பாரசீகத்தின் பரமஞானி

## - இப்ரகிம் பென் ஆதம் -
## (IBRAHIM BEN ADHAM)

ரி. கிருஷ்ணாஜீ
(தமிழாக்கம்:- ம. சி. சிதம்பரப்பிள்ளை)

**விவேகம்**— (அஞ்ஞானம் எது? மெய்ஞ்ஞானம் எது? இருள் எது? ஒளி எது? என்ற பாகுபாடுகளைப் பிரித்தறியும் பேரறிவு) **வைராக்கியம்**- (பற்றற்ற தன்மை. துறவு) இந்த இரண்டும் உண்மை ஞானிகளுடைய முக்கிய அம்சங்கள்.

துறவு என்பதனை விளக்குவதற்கு பாரசீகத்து ஞானி யான அத்தார் (Attar) ஒரு கதை சொல்வார். ''உண்மையைத் தேடி அலையும் ஒருவர் கடவுளை அடையவிரும்பினார். இவர் ஒரு கனவு கண்டார். ஒரு தேவதை அவர் முன் வந்து 'உன்னுடைய உடைமைகளையும் வைத்துக்கொண்டு எவ்வாறு கடவுளை அடைய முடியும்?' என்று கேட்டது. அவர் விழித்தெழுந்து, தனது உடைமைகளைத் துறந்து, ஒருபோர்வையை மாத்திரம் எடுத்துக்கொண்டு, கடவுளைத் தேட ஆரம்பித்தார். பின்பும் இவர் ஒரு கனவு கண்டார். தேவதை மீண்டும் சொல்லிற்று 'போர்வையுடன் நீ எவ்வாறு ஆண்டவனைத் தேடமுடியும்?' உடனே இவர் தனது போர்வையைத் தூக்கி வீசி எறிந்துவிட்டு நடக்கலானார். தேவதை மீண்டும் இவருடைய கனவில் தோன்றி 'உனது உடைமைகள் யாவையும் துறந்துவிட்டாய். உந்த இடத்திலேயே இரு. ஆண்டவன் உன்னைத் தேடி வருவார்', என்று கூறிற்று.

துறவு என்பது ஆண்டவனுடன் நேர் தொடர்பான உறவு கொள்ளுதலும், ஜீவராஜிகளுக்கு ஒத்தாசையாக இருத்தலும். உடமைகள் இல்லாதவர்களுக்குத் துறவு இலகுவானது; ஆனால் ஐஸ்வரியமுள்ளவர்களுடைய துறவு தான் வைராக்கிய அடிப்படையில் பிறந்த உண்மைத்

துறவாகலாம். மெச்சப்பட வேண்டியதும். புத்தருடைய துறவும், ஜனகமகாராசாவுடைய துறவும் மிகவும் அரிதில் காணக்கூடியதாகும். ஒரு ஊசியின் கண்ணூடாக ஒரு ஒட்டகம் நுழைந்துவிடும். ஆனால் ஒரு தனவந்தன் பரமண்டலத்துள் நுழைவது முடியாத விடயமாகும்.

பாரசீக தேசத்தில் பால்க் (Balkh) என்னும் இடத்தில் அரசனாக இருந்த **பென் ஆதம்** என்பவர் தனது இராச்சியத்தையும் ஆடம்பர வாழ்வையும் துறந்து, பக்கிரியாகி, ஆண்டவனை எந்த நேரமும் அழைத்தவண்ணம் இருந்தார். இவர் வாழ்ந்த காலம் எட்டாம் நூற்றாண்டு.

**ஆதம்** இளமையிலிருந்தே பக்தியில் திளைத்தவர். இவர் தனது அரண்மனையிலுள்ள உப்பரிகையில் ஒருநாள் வீற்றிருந்த காலை, கால் அரவம் கேட்டு, 'யார் அங்கே!' என்று வினவினார். ஒரு அந்நியன் அவண் தோன்றி, காணமற்போன தனது ஒட்டகத்தைத் தேடுவதாகக் கூறினான். அதிசயப்பட்டவராய், இந்த உப்பரிகையில், காணமற்போன ஒட்டகத்தை எவ்வாறு நீர் தேடுவீர்? என்று அரசன் வினவினான். 'எவ்வாறு **ஆண்டவனை** அரண்மனையில் காணமுடியும்'? என்று கேட்டவண்ணம் அந்நியன் அந்தர்யாமியாய் விட்டான். இன்னும் ஒருமுறை **ஆதம்** தனது அரண்மனை உத்தியோகத்தர்களுடன் அரச கருமங்கள்பற்றி விசாரணையில் இருந்தகாலை, ஒரு அந்நியன் திடீரெனப்புகுந்து, அரசனுடைய சிங்காசனத்தருகில் வந்து நின்று சுற்று முற்றும் பார்த்தான். 'என்னதான் தேடுகின்றாய்'? என அரசன் கேட்டான். நான் இந்த ஆச்சிரமத்தில் (அரசனுடைய அரண்மனையில்) தங்கவிரும்புகின்றேன். என்று புகன்றான். 'இது அரசர்கள் இருந்து அரசு புரியும் மாளிகை இது நீர் கருதும் ஆச்சிரமம் (மடம்) அன்று என்று **ஆதம்** கூறினார். இந்த மாளிகையில், உமக்குமுன் இருந்தவர்கள் யார்? என்று அந்நியன் கேட்டதற்கு 'எனது தந்தையாரும், அதற்கு முன் அவருடைய மூதாதைகளும்' என்று **அரசன்** கூறினான். 'எத்தனையோ மக்கள் வந்து வந்து இருந்து

இறந்து மறைந்துவிட்டார்கள். அவர்களும் போய்விட்டார்கள். இது ஆச்சிரமம் அல்லாது வேறு என்ன? என்று கூறியபடி அந்த அந்நியன் மறைந்துவிட்டான். ஆதம் பெரிய அவதிப்பட்டுவிட்டார்.

ஆதமுக்கு அமைதி பங்கமடைந்து விட்டது. தனது மன அமைதிக்காக வேட்டை ஆட ஒழுங்கு செய்ய வேண்டுமென ஆணையிட்டார். அப்படியே வனத்துக்கேகி தனது பரிவாரங்களிடமிருந்து விலக நேர்ந்தது. 'மரணத்தைப்பற்றிக் கவனமாக இரு' என்ற ஒரு சப்தம் கேட்டது. சுற்றும் முற்றும் ஆதம் பார்த்தார். ஒரு கலைமான் அரசன் முன்வந்து நின்றது. அதனை எய்வதற்காக கணை ஏவினர். 'ஆண்டவன் இவ்வித துஷ்ட வேலைகளுக்கா உன்னைப் படைத்தார்? இந்த மிருகத்தைக் கொல்ல வெட்கமில்லையா? இந்த அநியாயச் செயல்கள் புரிந்து உனது வாழ்வைக் கெடுக்க விருப்பமா?' என்ற குரல் கேட்டது. இச்சொற்கள் கேட்டதும், அரசன் துக்கத்தால் அழத்தொடங்கி விட்டார். பல எண்ணங்கள் வந்து மறைந்தன. ஈற்றில், மனைவி மக்களைத் துறந்து, தனது இராச்சியத்தையும் விட்டு, ஒருவரும் அறியாமல் தபசியாகத் திரியலானுர். தண்ணீர் குடிப்பதற்கு ஒரு செம்பும், தலை அணை ஒன்றுடனும் வெளிக் கிளம்பினுர். போகும் மார்க்கத்தில், ஒருவன் தனது இரு கைகளையும் சேர்த்து தண்ணீர் மொண்டு பருகுவனைப் பார்த்து, தன்னிடம் உள்ள செம்பை அவனிடம் கொடுத்து விட்டு அப்பாற் சென்றுவிட்டார். அதன்பின்பு, பிறிதோரிடத்தில், வேருெருவன் தனது இரு கைகளையும் தனது தலைக்கு அணையாக வைத்துத் தூங்குவதனைக் கண்ட ஆதம் தன்னிடம் இருந்த தலை அணையை அவனுக்கு ஈந்து விட்டு அப்பாற் சென்றுவிட்டார்.

நிஷாப்பூர் (Nishpur) என்னும் நகரத்தின் எல்லையை அடைந்து ஓர் குகைக்குள் ஒன்பது ஆண்டுகள் கடும் தவம் ஆற்றினுர். காடுகளிற் கிடக்கும் மரச்சுள்ளிகளைப் பொறுக்கி, கிழமைக்கு ஒருமுறை அவைகளை விற்று உணவு

வாங்கி உண்டபின் மிகுதியை தருமம் செய்து வருவாரா யினர்.

ஆதம் ஒரு குருவைத் தேடி, அவருடன் பன்னிராண்டு பணிவன்புடன் தொண்டுகள் செய்துகொண்டு வரலாயினர். இவர் குருவுக்கு மிகவும் கீழ்ப்படிந்து நடப்பதை அவதா னித்த குருபத்தினி இரக்கங்கொண்டு ஆதமுக்கு உடனே தீட்சை கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

ஆதமாகிய அரச துறவியின் ஆத்மஞானத்தையும் சோ திக்க எண்ணினர் குருவானவர். தனது பணிப்பெண்ணைக் கொண்டு அழுக்குநிறைந்த ஒரு வாளித் தண்ணீரால் அவர் உடம்பில் வீசச்செய்தார். 'இவ்விதம் பாலக்கில் (Balkh) செய்தால் உன்னை உயிருடன் விட்டு வைத்திருக்க மாட் டார்கள்' என்று ஆதம் கூறினர். அகந்தை அகலவில்லை என்று குரு அறிந்து தீட்சை கொடுக்கும் தினத்தையும் பின்போட்டுவிட்டார். பிறிதொரு தருணம் அதே பணிப் பெண் ஒரு ஊத்தை வாளித் தண்ணீர் கொண்டு ஆதம் மின் மேனிமீது சிந்தியும் தகாத வார்த்தைகளினல் ஏசியும், காலினல் உதைத்துத் தள்ளியும் துன்புறுத்தலானள். 'இந்த அழுக்குகளிலும் கேவலமான அழுக்குகள் நிறைந்த வன் யான்' என்று ஆதம் கூறினர். குரு இது கேட்டு அவ ருக்கு அருள் நோக்கம் செய்து தீட்சை வைத்தார். இவ் வாறு தீட்சை கொடுத்த பெரியார் கபிர்தாஸ். என்பவர் எனச் சொல்லப்படுகின்றது.

ஆதம் தனது குருவை விட்டு அகன்று ஆண்டவனைச் சதா தியானித்துக் கொண்டும் கடும்தவம் செய்து கொண் டும் திரியலாயினர். இவர் ஒருமுறை ஒரு தோட்டத்தில் தங்க நேர்ந்தது. அவரைத் தனது தோட்ட வேலைக்கு உதவி ஆளாக வரமுடியுமா? என்று தோட்டத் தலைவனுன அமீர் என்பவர் கேட்டார். ஒருமுறை அமீர் வந்து தனக்கு ஒரு பழம் வேண்டினர். ஆதம் ஒரு நறுங்கனியைப் பறித் துக் கொடுத்தார். அமீர் உண்டு அது மிகவும் தித்திப்பாக

இருப்பதனைக் கண்டு மீண்டும் ஒரு கனி வேண்டினர். ஆதம் ஒரு பழத்தைப் பறித்துக் கொடுத்தார். அமீர் அதனை உண்ணும்போது அப்பழம் புளிப்பதாகக் கண்டார். 'எதற்காகப் புளிக்கும் பழத்தைப் பறித்தாய்?' என்று அமீர் கேட்டார். 'இப்பழங்களை இதற்கு முன் தின்று ருசிபார்த்ததில்லையா?' என மீண்டும் வினவினுர். 'யான் இவண் வேலைக் கமர்ந்தவனே யல்லாது பழங்களை ருசிபார்ப்பதற்கு அமர்த்தப்படவில்லையே' எனக் கூறியதைக்கேட்ட தோட்ட முதலாளி யாகிய அமீர் ஆச்சரியப்பட்டவராக ஆதம்மைப் பார்த்து 'பேரும் புகழும் வாய்ந்த கசராத் ஆதம் போன்று பேசுகின்றுய்' என்றுர். அரச துறவி தம்மை அடையாளம் கண்டுவிடப்போகின்றுர்கள் என அறிந்து முஸ்லிம்களின் முக்கிய புண்ணிய ஸ்தலமாக விளங்கும் மக்கா நகருக்குச் சென்றுர்.

ஆதம் மக்கா நகருக்குச் செல்லுமுன்பே அன்னுருடைய புகழ் – அதாவது கசராத் அல்லது ஞானி என்பவர் வருகின்றுர் என்ற செய்தி வந்தடைந்து விட்டது. ஒரு அந்நியன் இவரைப் பார்த்து 'கசராத் ஆதம்' என்று கூறப்படுகின்ற ஞானியைப் பார்த்ததுண்டா? என்று வினவினுர். 'எதற்காக அந்த நாஸ்திகனைப் பற்றிப் பேசுகின்றீர்' எனக்கேட்டதும், இவ்விதம் பேசுவதே தேவ நிந்தனை என எண்ணிய அந்த அந்நியன் ஆதமுக்கு அடித்து விட்டான். 'ஓ! மனமே பெரியவரவேற்பை எதிர்பார்த்தாய்! வருவதனைப் பெற்றுக்கொள்' என்று பேசிக்கொண்டு சாந்தப்பட்டார். அவரை அடையாளங்கண்டபின் அடித்த அந்த அந்நியன் அரச துறவியின் அடிபணிந்து அழுது மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்.

மக்கா நகரில் வசித்த காலங்களில், புல், விறகு இவைகளை விற்றுக் காலம் கழித்தார். இதனுல் பெற்ற வருவாயைத் தருமத்தில் செலவு செய்தார். அரச வாழ்வைத் துறந்து நாற்பதாண்டுகள் ஓடி மறைந்தன. அவரது மனைவியும் மகனும் இவரைத் தேடி இங்கு வரும்போது புல்லும்

விறகும் பொறுக்குவதனைக் கண்டனர். தந்தையைக்கண்ட தனயன் கண்ணீர் சொரிந்தான். கைபிடித்த கணவனின் கோலத்தைக் கண்ட கற்புடையாள் கலங்கினாள். தாங்கள் அதிக நேரம் அங்கு நின்றால், அவர் வேறு இடங்களுக்குச் சென்று விடுவார் என அஞ்சி அவர்கள் திரும்பிவிட்டார்கள்.

இவ்வாறு கோவிலைச்சுற்றி அலைந்து திரியும் போது, தனது மகனைத் தனது சாயலில் கண்டு, மௌனமாக அதனைக் கண்ணுற்றவாறு நின்றார். ஒரு சந்நியாசி இவர்களிருவரையும் கவனித்துவிட்டு ஒன்று கூட்டிவிட்டார். ஆதம் மகனை அணைத்துக் கண்ணீர் மல்கினார். உடனே ஒரு அசரீரி பின்வருமாறு கேட்டது:- ஆண்டவனையே அல்லாது பிறிதொருவரையும் நேசிப்பதில்லை என்றும், வீடு, மனை, பிள்ளை முதலிய பந்தங்களிலிருந்தும் விடுபடவேண்டும் என்று சொல்லிவிட்டு சொல்லொன்று, செயலொன்றாக இருக்கின்றீரே!'

ஆதம் இவ்வார்த்தைகளைச் செவிமடுத்து மிகவும் வெட்கிவிட்டார். பள்ளிவாசல் முன் கண்ணீர் மல்கி அழுது தன்னை மன்னித்தருளவேண்டும் என இரவு முழுதும் நின்று வேண்டினார்.

பன்முறை அரச துறவியை அங்குள்ள சாமிகள் பலவாறு துன்புறுத்தியும் தூற்றியும் திரிந்தார்கள். எல்லாவற்றையும் அமைதியாகச் சகித்தார். ஆனால் இவருடைய உண்மை நிலை நாளடைவில் யாவருக்கும் அறியக்கூடியதாக வரவே, மக்கள் கூட்டம் திரண்டது. 'படைத்தவனுடன் அன்பாக இரு. படைத்தவைகளை விட்டு அகலு! எல்லாப் பந்தங்களையும் அகற்றிவிட்டு பற்றற்ற பரமனையே பற்று! ஒருவனுக்கு அகந்தை, வெட்கம், நித்திரை முதலியவைகள் இருக்கும்வரை ஆண்டவனிடமும் அவன் எழுந்தருளியிருக்குமிடங்களுக்கும் அலைந்து திரியவேண்டும்', என்று ஆதம் அடிக்கடி கூறுவார்.

பால்க் என்னும் நகரிலுள்ள அபு அலிசா கூக் என்பவர் தமது நிலம், புலம் யாவையும் துறந்துவிட்டுச் சந்நியாசியாகி, ஆதம் அவர்களுடன் கூடவேசென்றார். 'ஒரு அறிவாளி பணத்தில் ஆசைவைத்து அதனை வசூலிப்பதில் அக்கறை காட்டுவானாகில், கல்வி அறிவற்றவன் எவனைப் பின்பற்றுவது? ஆடுமேய்ப்பவனே ஓநாயாக இருந்தால், ஆடுகளை எவர்கள் கவனிப்பார்கள்? பசி மனதைத் தூய்மைப் படுத்துகின்றது. தேகத்தில் தோன்றும் இச்சைகளை விரக நோய்களை, அவாக்களைக் கெடுத்துவிடுகின்றது! பேரறிவைப் புகுத்திவிடுகின்றது' என்று அடிக்கடி கூறுவார்கள்.

ஆதம் போன்ற ஞானிகள் இருந்தால் இந்த உலகமே ஒரு சுவர்க்கமாக இருக்கும். லீஹன்ற் (Legh hunt) எனும் புலவன், ஆதம் மீது ஒரு கவி (Sornet) யில் 'இவரைப் போன்ற இனம் பல்கிப்பெருகுக' என்று பாடியுள்ளார்.

முற்றும்.

# சென்னை அடியார் திருக்கூட்ட இறைபணி மன்ற சஷ்டி பஜனை சங்க 14 ஆவது ஆண்டுவிழா

மேற்படி விழா 26-9-70 சனிக்கிழமை காலை 7 மணிக்கு பூக்கடை கோயில் அநுபூதிமண்டபத்தில் ஸ்ரீ அருணகிரிநாதருக்கு அபிஷேக ஆராதனையுடன் ஆரம்பமாயிற்று. நாராயண குருவைய செட்டி கல்யாணமண்டபத்தில் சுப்ரமணிய சுவாமிக்கு அபிஷேக ஆராதனை. சுவாமிநாத சுவாமி சுப்ரபாதம், ஸ்ரீ வெங்கடேச சுப்ரபாதம், சகஸ்ரநாம அர்ச்சனை, திருப்புகழ்பஜனை, ஆதியன நடைபெற்றன.

ஸ்ரீ நாராயண குருவைய செட்டி கல்யாணமண்டபத்திலிருந்து புறப்பட்ட ஒன்பது பஜனை கோஷ்டியினரும் ரெட்டிராமன் தெரு ஸ்ரீராமகிருஷ்ண சைதன்ய மந்திரத்திலிருந்து புறப்பட்ட எட்டு பஜனைக்கோஷ்டியினரும்செய்த திருவீதிப்பஜனை விழாவின் உச்சமான நிகழ்ச்சியாக அமைந்தன.

அரன் நாமமே சூழ்க; வையகமும் துயர்தீர்கவே.

# அப்பர் அருளமுதம் - 11

## ( முத்து )

## எழுதிக் காட்டொணுது.

இறைவனுக்கு உருவம் உண்டு; இல்லை; உண்டு இல்லை என்று வாதிடுகின்றது உலகம். கோயிலில் உள்ள திருவுருவங்களும், படங்களும் இறைவனின் உருவத்தைத்தானே காட்டுகின்றன என்று வாதிடுவார் ஒருபக்கம்· இறைவன் உருவமற்றவன், அவனுக்கு உருவம் கற்பித்தலே பாவம் என்பார் இன்னொரு பக்கம். எங்கும் இருக்கும் இறைவன் உருவமாயும் இருப்பான்; அருவமாயும் இருப்பான்; அரு உருவாயும் இருப்பான் என்பார் பிறிதோர் சாரார்.

மாமரத்தை யாரோ வைத்து உண்டாக்கினுன். மாமரம் பழுத்துக் குலுங்குகிறது. பசியுடையவன் செல்கின்ருன். பசியடங்க உண்கின்ருன். மாமரத்தின் பயனை நுகர்கின்ருன். இன்னெருவன் வருகின்ருன். பழம் ஒன்றையும் ருசி பார்க்கவில்லை. இது யாருடைய தோட்டம்? எத்தனை மாமரம்? என்னசாதி மரங்கள்? இப்படி ஆராய்ச்சியில் ஈடுபட்டான் இவன் பழத்தின் பயனை நுகர்ந்தானல்லன்.

இதேபோல இறைவனுடைய உருவத்திலும் அருவத்திலும் சண்டையிட்டு இறைவனின் உண்மைத் தன்மையை அறியாமலேயே வாணுளை வீணுளாக்கிக் கெட்டழிந்து போகின்ருர்கள். இறைவனுடைய வியாபகத்தை உணர்ந்த பெருமக்கள் பக்திசெய்து இறைவன் தன்மையை உணரத் தொடங்கினுர்கள். அங்ஙனம் உணர்ந்தவர்கள் சர்க்கரை மலையை ருசிக்கப் புகுந்த எறும்புபோல இறைவன் மயத்திலே தாமும் ஒன்றி அதுவானுர்கள். இறைவன் எத்தகையன் ஆயினும் ஆகுக. ஏதுக்களாலும் எடுத்த பொருளாலும் மிக்குச் சோதிக்க வேண்டாம். பக்தியினுல் அவன் அருளில் மூழ்கி வாழ்தலே அருள் வாழ்க்கை எனப்படும்.

கச்சிமயானம் என்பது கச்சி ஏகம்பத்திற்கு அணித்தாயுள்ள ஒரு வைப்புத்தலம். நெருப்பும் சூடும் போல இறைவனும், இறைவியும் அபின்னமாக இருப்பர். இறைவி கருணை உள்ளவள். கருணை கண்ணில் விளங்குவது. கருணையின் பண்பை விளக்குவதற்காகத் தேவி மைப்படிந்த கண்களையுடையவளாக விளங்குகின்றாள். அவள் கருணையின் குழைவை எம்முள்ளத்தால் தாங்க முடியாது என்று கருதியே கண்ணின் கருணையை மறைக்க மைதீட்டியுள்ளாள் போலும். இறைவனும், இறைவியும் இருவர்; ஒருவர்; இருவரும்தான் ஒருவரும்தான்; ஏகன்; அனேகன் என்றெல்லாம் இலக்கணம் கூறுவர்.

இறைவனை நீண்ட சடையை உடையவன் என்று கூறலாமேயன்றி, தனக்கு ஒப்பாக ஒருவரை உடையவன் அல்லன். மதி போலும் முகம் என்னும்போது மதி உவமானம். முகம் உவமேயம். உவமானமாகக் கூறப்படும் பொருள் உவமேயத்திலும் சிறந்ததாகவே அமையும். அது போல இறைவனுக்கு உவமை கூறுவதற்கு இறைவனிலும் பார்க்க உயர்ந்த ஒரு பொருள் இருந்தால்தானே அதனை உவமை கூற முடியும். ஆகவே தனக்கு ஒப்பாக ஒருவரை உடையவன் அல்லன். பாதி பெண் வடிவுடைய அர்த்த நாரீச்சுரன் என்னும்போது உலகில் அத்தகைய உருவத்தை எங்கே தேடிக் காண்பது? ஆகவே அவனுக்கு அவனே நிகர் என்று ஆகிறது,

பாதிப் பெண்ணுரு எனும்போது அவன் ஒருவனு? அன்றி இருவரா? எனும் சந்தேகமும் எழுகின்றது. ஏதாவது ஒரு ஊரின் பெயரைக் குறித்தாவது அவனை அழைக்கலாமோ என்றால் ஓர் ஊரில் இருப்பவனுமல்லன். எல்லா ஊரும் அவன் ஊரே. அங்ஙனமானுல் எந்த ஊரைக் குறிப்பிட்டு அழைப்பது?

உலகப் பொருள்களில் ஒருவன் அல்லன்; ஓர் இடத்தில் வரையறைப்பட்டு நிற்பவன் அல்லன். தனக்கு எவ்

வாற்ருலும் யாதொரு பொருளும் உவமையாதல் இல்லாதவன். இப்படிப்பட்டவனைக் காண்பது எப்படி? மனம் உருவம் உள்ள ஒன்றைத் தானே பற்றும். உருவமில்லதனை எவ்வாறு பற்றும்?

அந்தத் திருவடிவமும், அந்த நிறமும், அவ்வழகும் பொருந்தப் பாடியுள்ளார்களே! வேதங்கள் அவன் பெருமையைக் கூறப்போய் ஐயா என ஓங்கி ஓலமிட்டுக் கூற முடியாமல் தத்தளித்தன, அப்படியாஞல் அவனைக் காண்பதற்கு வழி தான் என்ன? அவன் மனமிரங்கித் தம்முருவைக் காட்டாதொழிந்தால் யாரேதான் காண வல்லார்? தாம் தாம் அவன் திருவருளையே கண்ணுகப் பெற்றுக் காணின் அவைகளைக் காணலாமேயல்லாது மற்றைய பொருள்கள் போல, பிறரொருவர், இன்னவகையுட்பட்டவன், இன்ன நிறத்தையுடையவன், இன்ன வடிவம் உடையவன் என்று சொல்லோவியமாகவோ, எழுத்தோவியமாகவோ எழுதிக் காட்டல் இயலாது. இதனை அப்பர் சுவாமிகள் பின்வரும் தேவாரத்தாற் குறிப்பிடுகின்ருர்.

மைப்படிந்த கண்ணுளுந் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னி னல்லான்
ஒப்புடைய னல்லன் ஒருவ னல்லன்
ஓரூர னல்லன் ஒருவம னில்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும்
அவனருளே கண்ணுகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணுதே.

★★ ★★ ★★ ★★ ★★

# மகாத்மாவின் மணிமொழி.

நண்பனை நண்பன் வணங்குவது போலவேதான் எஜமானனை அடிமை வணங்குகின்ருன். ஆயினும் அடிமைக்கும் நண்பனுக்குமுள்ள வித்தியாசம் மலைக்கும் மடுவுக்குமுள்ளதாகும்.

# இயற்கையே சோதிடம்

## பாடம்: அ. வியாழன் வெள்ளி அஸ்தமனம்

ச. இ. அப்புத்துரை – சோதிடன்
வெள்ளவத்தை.

1970 அக்டோபர் 28ந் திகதியிலிருந்து நவம்பர் 26ந் திகதிவரை வியாழனும், நவம்பர் 7ந் திகதியிலிருந்து நவம்பர் 19ம் திகதிவரை வெள்ளியும் அஸ்தமனமாகும்.

இக்காலங்களில் வல்லரசுகளுக்குள் பகையதிகமாவதோடு பட்டம் பதவிகள் மாறுதலும் அரசியல் குழப்பங்களும் தானிய விலையேற்றமும் பணமுடை பஞ்சமும் ஏற்படும். சமயாசாரங்கள் குறைவுபடும். அக்டோபர் 28லிருந்து நவம்பர் 26வரை வியாழன் மேற்கில் அஸ்தமனம். அஸ்தமன மென்பது வியாழனுக்குக் கிட்ட 11 பாகையில் சூரியன் வந்ததும் வியாழன் மேற்கில் அஸ்தமனம் பின்னும் வியாழனிலிருந்து 11 பாகை சூரியன் அப்பால் சென்றதும் வியாழன் கிழக்கில் உதயமாகும். இக்காலவரை வியாழக் கிரகத்தைக் காணமுடியாது, மூடமெனப்படும். இக்காலம் சுமார் ஒரு மாதமாகும். இக்காலத்தில் இலக்கிய விற்பன்னர்கட்கும், சட்ட நிபுணர்கட்கும், மந்திரிமாருக்கும், பெரும் வல்லரசுகட்கும், பிராமணர்கட்கும் பதவி, பட்டம், வேலை இடம் முதலியன மாற்றமுறுவதோடு (புருஷ வர்க்கமான) ஒற்றைப் பருப்பையுடைய நெல், சோளம், கோதுமை, பேரீச்சை, பனை, தென்னை, குரக்கன், கமுகு, போன்றவை விலையேறும். வியாழனின் வீடாகிய தனு மீன லக்கினத்தில் பிறந்தோர் இன்னொருவர் ஆதிக்கத்திலிருந்து முன்னேறுவார்கள். மனம் அவியுமாப்போலிருக்கும்.

1970 நவம்பர் 7ந் திகதியிலிருந்து 19ந் திகதிவரை சுக்கிரன் இப்போ மேற்கு வானத்தில் மாலை வெள்ளியாயிருந்து

வக்கிர அஸ்தமனமாகும். நவம்பர் 19ந் திகதி விடியற் காலை கிழக்கில் விடிவெள்ளியாக உதயமாகும். இக்காலம் 12 நாட்களாகும். இச்சுக்கிரன் சுபாவ அஸ்தமனம் 70 நாட்களாகும். (திருக்கணிதபஞ்சாங்கத்தில் வெள்ளி வக்ர அஸ்தமனம் 6 நாட்கள்.)

இச்சுக்கிரன் இப்போ மாலை வெள்ளியாக 292 நாட் களும் வக்கிர அஸ்தமனத்தின் மேல் விடிவெள்ளியாக 292 நாட்களுமிருக்கும். இச்சுக்கிரன் 225 நாட்களில் சூரியனைச் சுற்றிவரும் பொழுது, தனது நாராசத்திலும் 59 நாடி 5 வினடிக்கொரு முறை சுற்றி ஒரு தினந்திர சலனத்தைப் பெறும்.

இப்போ மாலை வெள்ளி சூரியனுக்கு முன்னால் ஓடுகிறது. வக்ர அஸ்தமனத்தின் மேல் சூரியனுக்குப் பின்னால் ஓடு கிறது. இது சூரிய உதயத்திற்கு முன் கிழக்கு வானத்தில் விடிவெள்ளியாக உதயமாகும்.

இச்சுக்கிரன் அஸ்தமனகாலத்தில் விஞ்ஞானிகட் கும், மருத்துவர், பாடகர், சினிமா நட்சத்திரங்கட்கும், சோதிடர் கட்கும், பெருமைவாய்ந்த பெண்கட்கும், அசுப பலன்களையும் கொடுப்பதோடு பட்டமாற் றம் வேலை வீடு முதலிய விலாசமாற்றங்கள் வருவதோடு, ஸ்திரிவர்க்கமான இரு பருப்புக்களையுடைய, உழுந்து, பயறு முதலிய தானியங்கள் விலையேறுவதோடு யுத்த முஸ்தீப்புகளும் சாதி, சமய, பாஷைப் பிரச்சினைகள் அதிக மாகும். இச்சுக்கிரனின் வீடுகளாகிய இடப துலாத்தில் பிறந்தோர் இன்னொருவர் ஆதிக்கத்திலிருந்து முன்னேற்ற மடைவார்கள். பொதுவாக ஒரு காலத்தில் வியாழன் வெள்ளி அஸ்தமனத்தால் நாட்டுக்குப் பெரும் நட்டமுண் டாவதோடு சுபகருமங்களும் இக்காலவரை விலக்குதல் நன்று. பெருமைவாய்ந்த ஸ்திரிபுருஷருக்காகாதெனலாம்.

8ம் இடம் சோதிடத்தில் ஆயுள் தானம். தத்துவத்தில் விகாரம் 8 அவை. காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம், இடும்பை, அசூயை. இவற்றுள் கா மம், ஒன்றையே குறிக்கும். மோகம் எல்லாவற்றையும்

குறிக்கும். இந்த மோகத்தைக் கொண்டு; தான்கொண்ட கருத்தை அரிச்சுனன் மூலமாக கிருஷ்ணபரமாத்மா நிறைவேற்றினுர். (கீதைப் பேருரையால்)

எட்டு என்ற இலக்கம் (அ) என்று இலக்கணம் தொல்காப்பியம் கூறுகிறது. எட்டை அ. என்று கூறும்போது அது திரும்பத்திரும்ப வருகிறது. வியாழனேடு வியாழன் எட்டு, அட்டகிரி அட்டமா நாகம், அட்ட கஜம், அட்டவசுக்கள், அட்டதிக்குப் பாலகர், அட்டாங்க யோகம், அட்டாவதானம் இவை வளரும். இவற்றுடன் 'அ' எல்லா எழுத்துக்களிலும் கடவுளைப் போல் கலந்திருக்கின்றதால் ஆணுவுக்கு அடியும், முடியும் அற்றதோடு ஆதியும், அனுதியுமானது. ஆகவே எட்டை ஆயுள்தானமாக்கினுர்கள்.

நாம் சாவதில்லையே! நாம் என்பது இந்த ஊனை உண்ணும் உடலா? இல்லையே. பின்னை எது? ஆணுவா? முதலில் 'நீ' 'நான்' என்று வெவ்வேருயுள்ளவைகளை ஒன்ருக்க வேண்டும். நீயும் நானும் சேருவதினுல் 'நாம்' ஆகிருேம். இப்பொழுது நம்,மையும் அவனை,யும் சேர்த்து விடவேண்டும். முதலில் நான் இச்சிருஷ்டியுடன் ஒருமை பெற வேண்டும். 'ஓம் தத்ஸத்' என்ற தாரக மந்திரத்தில் இக்கருத்தே அமைந்திருக்கிறது. 'ஓம்' என்பதற்கு 'ஆம்' பரம்பொருள் என்பது பொருள். சிருஷ்டியோடு ஒன்றுபட வேண்டில், 'திரிபதாகாயத்திரி' என்று ஜெபியுங்கள் பிருதிவி சக்தி மயமாகலாம்.

★★

## விவேகானந்தரின் வீரமுழக்கம்

எவரையேனும் சார்ந்து நிற்பவன் மெய்ப்பொருளாந் தெய்வத்திற்குப் பணிசெய்ய வல்லவனுகான்.

வாழ்பவர் கடவுளே, வாழ்வது ஆன்மாவே. வாழ்வது ஞானமொன்றே, அதனைப் பற்றுக.

ஆண்டவன் பிச்சையம்மையாரின் அருட்பாடல்

# பட்டமரம் தளிர்த்த விந்தை

பட்டமரத்தில் பறவையொன்று கூடுகட்டி
முட்டையிட்டு மூவெட்டு ஆண்டளவு அடைகாக்கத்
திட்டமாய்ச் சூடேறி முட்டை உடைந்திடவும்
குட்டிக் கிளியொன்று முட்டையில் வெளியாகக்
கட்டழகு வாய்ந்த குட்டிக் கிளியைக் கண்டு
இட்டமுடன் தாய்ப்பறவை இறகினுல் தானணைக்க
மட்டற்ற மகிழ்வினுல் மரமும் துளிர்த்துவிட
வெட்டவந்த வீணர்கள் வியப்புடன் பார்த்திருக்க
எட்டநின்று பார்த்து ஏசி இகழ்ந்தவர்கள்
கிட்டத்தில் வந்து கிளியைப்பார்த் ததிசயிக்கச்
சட்டங்கள் பேசிய சதுரரெல்லாம் வாயடைத்துக்
கொட்டம் அடங்கிக் கும்பிட்டுத் தாமகல
அட்டதிக்கிலுமுள்ள அறிஞரெல்லாம் வந்தன்பாய்ப்
பட்டமரத்தைப் பார்த்துப் பரவசமாய்ப் பணிந்தேத்த
விட்டகுறை தொட்டகுறை எல்லாம் விலகிப்போய்ப்
பட்டமரத்திற் பறவை குட்டியுடன் வாழ்ந்ததுதே.

குறிப்பு:— பட்டமரம் - பிச்சி. பறவை — ஆண்டவன்.
மூவெட்டு ஆண்டு - 24 வருடம் சாதனைசெய்தது.

★★

## விவேகானந்தரின் வீரமுழக்கம்

பொது மக்களைப் புறக்கணித்ததே பெரும் தேசியப் பாவம் என்றும், நாம் எய்தியுள்ள கீழ்நிலைக்குரிய காரணங்களுள் அது ஒன்று என்றும் யான் கருதுகிறேன். இந்தியப் பொதுமக்கள் இன்னொரு முறை நல்ல கல்வியும் நல்ல உணவும், நல்ல பாதுகாப்பும் பெறும்வரை, அரசியல் எவ்வளவினதாயினும் பயன்படாது.

# மக்களினம் ஒன்றே.

( சி. கணபதிப்பிள்ளை - திருக்கோயில் )

மனிதகுலம் தோன்றியதிலிருந்து இதுவரை ஒரேவிதமான உற்பத்தி முறைதான்; இதிலிருந்து மக்களினம் ஒன்றே என்பதை யாவரும் ஒப்புக் கொள்வார்கள். பிறப்பு - இறப்பு, உண்டல் - உடுத்தல், உறக்கம் - விழிப்பு, நினைப்பு - மறப்பு, இவைகளினிடையிலே, மக்களினம் உலகில் உள்ள நிலம், நீர், தீ, காற்று, வெளி ஆகிய ஐந்து பொருட்களினுலும் ஆக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பகுத்தறிவுள்ள மக்கள் அறிந்து, தெளிந்து கொள்வார்கள். உலகம் ஐந்தினுல் ஆக்கப்பட்டு மக்கட் பிறவிக்கு உணவாகிக் கொண்டே இருக்கிறது. இதிலிருந்து மக்களினம் விடுபடும்போது தான் மரணம் வருகிறது. மரணம் வருவதற்கு முன்பு எந்த மக்களும் உலகத்தில் உள்ள ஐந்தில் ஒன்றினைப் பிரிந்தும், ஒரு கணப்பொழுதேனும் உயிர் வாழவே முடியாது. உலகம் ஐந்தினுல் ஆக்கப்பட்டது போலவே மக்களும் ஐந்தினுலேதான் ஆக்கப்பட்டிருக்கிருர்கள்; இந்த உண்மையை எல்லா மக்களும் புரிந்து கொள்ளுதல் அல்லது புரியாத மக்களினத்திற்கும் புரிய வைத்தல் மிகவும் கடினமான காரியம். 'நீ கல்லைச் சாப்பிடுகிருய்! மண்ணைச் சாப்பிடுகிருய்! மரத்தைச் சாப்பிடுகிருய்! காற்றைச் சாப்பிடுகிருய்! நெருப்பைச் சாப்பிடுகிருய்!' என்று ஒரு சாதாரண பேர்வழியிடம் சொன்னுல் என்ன பதில் கிடைக்கும்? ஏன்? உலகத்தை ஆட்சி செய்கின்றேன் என்று கூறிக்கொண்டிருக்கும் ஓர் சர்வாதிகார அரசனையே கேட்டுவிட்டால் நடப்பவை வேறு; ஆனுல் மக்கள் குலம் அன்பு, அறிவு, அறம், கருணை, கடவுள் நம்பிக்கை என்னும் பண்புக்குணங்களை மறந்து, நான், என்னுடையது, என் நாடு, என் குடும்பம், என் அரசு, என் அமைச்சு என்னும் ஆணவத் தடிப்புத் தலைவிரித்தாடிப் பல

பல அழிவுக் கருத்துக்களில் செயற்படும்போது தான் மரணம் என்னும் அசைக்க முடியாத பெரிய பூகம்பம் ஏற்படுகிறது. அதைக்கூட நேரில் பார்த்த பொழுதிலும் மக்களினம் விழிப்படைவதில்லை; ஏன்? தன்னுடைய தந்தை தாய், தனயர், கணவன், உறவினர், அயலவர், இறந்து போவதைக் கண்டிருந்தும் தனக்கும் இவ்வித மரணம் சம்பவிக்கப் போகிறது என்னும் உண்மையினை நம்புவதற்கு மறக்கிறது மக்களினத்தின் '' நான், என்னுடையது '' என்கின்ற ஆணவ இருள். ஏனெனில் '' உயிர்க்குற்றம் '' என்று அழைக்கப்படுகின்ற அந்தப் பெரிய ஆசை உயிரோடு அணுவாகக் கலந்து விட்டமையினாலே; சரித்திர ஏடுகளிலே அல்லது நீதி நூல்களிலே வேத வாக்கியங்களிலே கூறப்படுகின்ற செய்திகளிலெல்லாம் எத்தனையோ விசித்திரமான மக்களினங்களை நாம் காண்கின்றோம்! அவர்களெல்லாம் எங்கே; பிறக்கின்றவர்கள் சில காலம் இருக்கின்றார்கள். எப்படி? இன்று செல்வக் குழந்தை, நாளை சிறு பருவம், அடுத்தநாள் காளை அல்லது கன்னி, மறுநாள் தம்பதிகள் மற்றைநாள் அமங்கலி, மறுவினாடி கிழவன் கிழவி, அடுத்த நாள் சவம்பிணம், அடுத்த பொழுதிலே நெருப்பு, அல்லது மண், முடிந்தது முற்றும். அப்போதுதான் ' நான் என்னுடையது ' என்கின்ற ஆசை மடியும். இந்த உண்மையினைத்தான் சமயங்கள் கூறுகின்றன. ஆனால் மரணம் என்னும் மயக்கமாகிய பாவி ஆசையென்னும் வடிவிலே தோன்றி என் உடல்! என் உயிர்! என் மக்கள்! என் நாடு! என் ஆட்சி! என் அரசு! என்று மக்களினத்தை அழித்து விடுகிறது. சைவசமயமென்னும் சிவசமயத்தில் பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களிலும் கூறப்படுகின்ற முப்பொருளுண்மைகளை உணர்ந்து கொண்டால் மக்களினம் ஒன்றே என்னும் உண்மை புலப்படும். உண்மையை ஒழிப்பதற்குச் சட்டம் தீட்டி, இனம், மதம், நாடு, அமைச்சு, ஆட்சி என்று தங்கள் தங்கள் மனம் போனபடியெல்லாம் சிந்தித்து ஈற்றில் இறந்து, அழிந்து போகின்ற மக்களினத்திற்கு அறிவுரையும் அறவுரையும் கூறும் முறையிலே அமைந்திருக்கின்ற கணக்கற்ற கோடாகோடி வார்த்தைகளிலெல்லாம்

மாறுபாடு இல்லாத நல்ல கருத்துக்கள் தான் நிறைந்திருக்கின்றன. ஆனால் அந்தக் கருத்துக்களை அறிவது அல்லது ஏற்பது அதன்படி ஒழுகுவது என்னும் நல்ல செயல்களுக்கெல்லாம் சில நல்ல தன்மைகள் அமையப்பெற வேண்டும், அல்லது அந்தத் தன்மையைக் கட்டாயமாக அமைத்துக் கொள்ள வேண்டும். அவை:—

''இந்த வார்த்தை யாரால் உபதேசிக்கப் பட்டது அது ஆணா, பெண்ணா? எந்த நாட்டவர்? என்ன இனம்? என்ன மதம்? என்கின்ற பேதாபேதங்களை அறவே ஒழித்துவிட்டு, வார்த்தை; வார்த்தையினால் கூறப்படும் கருத்து, அதன் பொருள், அதன் உண்மை ஆகிய நல்லவைகளை மட்டும் ஏற்றுக்கொண்டால் அப்போதுதான் மக்களினம் ஒன்று என்னும் கட்டற்ற உண்மை நிரம்பிய அருள் தன்மை தோன்றும். அப்போதுதான் எல்லாம் ஒரே குடும்பம், உலகம் எம்முடையது, உலக மக்கள் எம்மனோர், யாமும் உலகின் ஓர் சிறிய அணு என்னும் பேரறிவு தோன்றும். அப்போதுதான் மக்கள் ''சுதந்திரம்'' என்கின்ற அறத்தின் சக்கரநெறி உதயமாகும். அப்போது தான் தீர்க்கதரிசிகள், சமயகுரவர்கள், பெரியவர்கள், உண்மையுணர்ந்த வித்தகர்கள் கூறிய ''தருமம்'' என்னும் நல்ல தேவதை உலகில் நடமாடத் தொடங்கும், அப்போதுதான் கல்வி, கேள்வி, அன்பு — அறிவு, ஆற்றல் தொண்டு, தூயபணி, என்னும் நல்ல செயல்களெல்லாம் நின்று நிலவும். இந்தத் தருணத்திலே தான் மக்களினம் வாழ முடியும்; அப்படி வாழ்கின்ற மக்களும் அமரரென்று அழைக்கப்படுவார்கள். இந்த நிலை மிக விரைவிலே தோன்ற வேண்டும். அதற்கு உலகிலுள்ள எல்லா மக்களின் இதயமும் இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட வேண்டும். இறைவனுடைய திருநாமம் உலகெங்கும் நிறைவுபெற வேண்டும். எல்லா மக்களும் இறைவன் நாமத்தை மனம், மொழி மெய் யென்னும் முக்கரணங்களினாலும் இடைவிடாது வழிபட வேண்டும். அந்தநாள் தான் மக்களினம் ஒன்றுபடும் நன்நாள். ஒன்றாக மதிக்கப்படும் நாள்.

வாழ்க மக்களினம்! வளர்க அன்பு நெறி!!

# நெஞ்சம் ஓர் புதையல்

(ந. சிவப்பிரகாசம்)

காலத்துக்குக் காலம் மாபெரும் மன்னர்கள் இம்மண்ணுலகை ஆண்டனர். மாண்டனர். மக்களும் வாழ்ந்தனர். வாழ்கின்றனர். மண்ணுள் மாய்ந்து மடிகின்றனர். அவர்கள் வழிபட்ட தெய்வங்களின் திருவுருவங்களும் சில மண்ணுள் மறைந்தன. இவையாவும் இயற்கையின் செயல்களே.

சீரும் சிறப்பும் வாய்ந்து விளங்கி, மறைந்து போன புராதன இடங்களைப் புதைபொருள் ஆராய்ச்சி நிபுணர்கள் ஆராய்கின்றனர். காட்சிப் பொருள்களாகவும் வைக்கின்றனர். சரித்திரங்களும் வரைகின்றனர். உலகின் தோற்றமும் ஒடுக்கமும் இறைவனின் திருவுளமே. இறைவன் உலகையும், உலகில் உயிர்களையும் படைத்துக் காத்து அழிக்கின்றான்.

அதுபோல் மனிதனும் கல்வியறிவு ஆற்றலுக்கேற்ப உயிரற்ற பொருட்களை ஆக்கி உபயோகிக்கின்றான். ஈற்றில் அவையும் அழிகின்றன. இவையாவும் மனிதனின் உள்ளப் புதையலிலிருந்து அவரவர் அறிவு, ஆற்றலுக்கேற்பத் தோற்றுபவைகளே.

"பழையன கழிதலும், புதியன புகுதலும்" என்று உதாரணத்திற்காகச் சாதாரணமாகச் சொல்லுவார்கள்.

ஆனால் "பழையன புதிதாயும் புதியன புனைந்தும் இறைவன் கழலடி நினைந்தும் வாழ வேண்டும்"

என்று கூறுவது நன்று.

புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் தம் ஆராய்ச்சியின் பயனாய் ஆதிகால மக்களின் நாகரீகத்தையும், அறிவு நுட்பங்களையும், சமய விஷயங்களையும் அறிகின்றனர்.

அதுபோல் ஆன்மீக வாழ்க்கையில் வாழ்ந்த பெரியார்கள் அவ்வப்போது தெய்வீக உணர்ச்சியினுல் தத்தம் உள்ளங்களில் உதித்த உண்மைகளை நூல்களாகவும், கவிகளாகவும் வெளிப்படுத்தினர். இன்றும் வெளிப்படுத்துகின்றனர். அவ்வித நூல்களையோ, பத்திரிகைகளையோ கட்டுக்கட்டாக அடுக்கிக் காட்சிப் பொருளாக வைக்காது அவற்றில் கருத்துக்கொண்டு திரும்பத் திரும்பக் கை பட்டுக் கண்பட்டு மனதிற் படிய வைக்க வேண்டும். அவற்றிற்கேற்ப வாழ முயல வேண்டும்.

தேவார திருவாசகங்கள் மனப்பாடமாய் மட்டும் இருந்தால் போதுமா? பனிக்கட்டிபோல் உறைந்து கல்லாய்க் கிடக்கும் தன்மையான எங்கள் கல் நெஞ்சுகள் உருகக் கனிரசங்களை ஊற்றிக்கொண்டே யிருக்க வேண்டும். அப்போதான் கல்நெஞ்சங் குலைந்து உருகிக் கண்ணீராய் வெளிப்படும். பக்தி வளரும்.

தெய்வ கடாட்சம் பெற்றுத் தோன்றிய ஆன்றோர் திருவாய் மலர்ந்தருளிய திருவாக்குகள் அத்தனையும் அபார சக்தி வாய்ந்த திருமந்திரங்களேயாம். சுருங்கக்கூறி விளங்க வைக்கும் சூட்சுமப் பொருள்கள் நிரம்பப்பெற்ற உண்மைநிறை மொழிகளாகும். ''உரு ஏற ஏற திரு ஏறும்'' என்றபடி அவற்றை நாங்கள் ஓதி ஓதி உணர்வு எய்த வேண்டும்.

எங்கள் நெஞ்சத்தைப் பூப்போன்றதென்றும், கல் நெஞ்சம் என்றும், சமுத்திரத்திலும் ஆழமானதென்றும், ஓர் குகை என்றும் பலவாறு கூறுகின்றனர். யாவும் ஆன்றோர் கண்டறிந்த உண்மைகளே.

நம் உள்ளத்தில் படம் பிடிக்கும், (ரேப் றெக்கோடர்) 'ஒலிப்பதிவு செய்யும்' அதி நுண்ணிய அற்புதமான சூட்சுமக் கருவிகள் அமைந்திருக்கின்றன. அவையாவும் யாரும் இயக்காமலே தாமே இயங்கித் தத்தம் தொழில்களைச்

செய்து கொண்டே இருக்கின்றன. அறிவும், ஐம்புலன்களும் அவைக்கு உதவி புரிகின்றன.

பிறந்தநாள் தொட்டு இறக்கும் நாள் வரை கண்களாற் காண்கின்ற காட்சிகளும், காதாற் கேட்கின்ற செய்திகளும், நூல்களில் வாசித்து அறிகின்ற விஷயங்களும்' மனப்பாடம் செய்யும் நூல்களும் யாவும் நெஞ்சத்துள் ஒன்ருய்ப் புதைந்து கிடக்கின்றன. மாபெரும் விஷயங்கள் எல்லாம் எங்கள் நெஞ்சத்துள் அதி சூட்சுமமாகப் புதைந்து கிடப்பதிஞல் எங்கள் உள்ளமானது எவ்வளவு அபார சக்தி வாய்ந்த ஓர் நிலேயமாய் இருக்க வேண்டும் என்பது சிந்திக்க வேண்டிய ஓர் பெரும் விஷயமாக இருக்கின்றது. இப்பெரும் புதையலே எக்கருவி கொண்டும் காண்பதரிது.

வெண்ணெய் உண்ட கண்ணன் வாயுள் யசோதைப் பிராட்டியார் மூவுலகங்களேயும் கண்டு மயக்கமடைந்தாளாம். ஆமை ஆபத்து வேளேயில் தனது உறுப்புகளே உள் இழுத்து அசைவற்றுக் கிடந்து கற்பாறை போற் காட்சி கொடுக்குமாம்.

அதுபோல் யோகிகளும் புலன்களே உள்ளடக்கிக் கற்சிலேயாய் நிஷ்டையில் இருந்து உள்ளக் குகையுள் ஜோதியை வளர்த்து பரவசமான காட்சிகளேக் கண்டானந்தித்திருப்பார்களாம்.

யாவரது உள்ளங்களிலும், விடுதலே என்கின்ற முத்திப் பேருகிய இறைவனுடைய பாதார விந்தங்களே அடையக்கூடிய ''ஞானமும்'' ஓர் புறம் உறைந்து கிடக்கின்றது. இதை வளர்த்து முத்திப் பேற்றை அடைவதே எங்கள் வாழ்க்கையின் முக்கிய குறிக்கோளாகும்.

மாலே நேரங்களில் சுத்த காற்று வாங்கும் பொருட்டு வெளியான இடங்களிலோ கடற்கரைகளிலோ உலாவி வருதல் உடலுக்கு உறுதியென்பார்கள். ஆனுல் மாலே நேரத்

திலும் பார்க்க அதிகாலையில் நாலு மணிக்கு நித்திரை விட்டெழுந்து உற்ற தெய்வத்தை உறுதியாக மனதில் தியானித்து "ஓம், ஓம்" என்றோ, "ஓம் நமச்சிவாய என்றோ நாவினால் உச்சரித்துக்கொண்டே தனிமையில் வெளியில் உலாவ வேண்டும். அல்லது தேவார, திருவாசகங்களை இறைவன் நினைவுடன் கனிவோடு ஓதி உலாவ வேண்டும். இவ்விதம் அப்பியாசித்துக் கொண்டே வருவோமானால் எவ்வித தீய உள்ளங்களாய் இருப்பினும், காலகெதியில் மாசற்ற பண்பட்ட தூய உள்ளங்களாய் மாறி நலன் தரும். இவ்விதம் உலாவுதல் உள்ளத்தில் உயர்ந்த சிந்தனைகளை உதிக்கச் செய்யும். உடலுக்கு உறுதியுமளிக்கும். ஆதியந்தமில்லாத அப்பனுடைய அருள் வெள்ளம் வந்து உதயமாகும் காலமும் இதுவேயாகும். இதனாலன்றோ:-

"உள்ளத்தில் உள்ள பரமா – எனக்
உன்னருள் வெள்ளத்தை யீவாய்
கள்ள மில்லாத மனத்தால் — உனைக்
காலையும் மாலையும் தொழுவேன்"

என்று ஓர் பெரியார் பாடியுள்ளார். இப்போவைத்தானும் திரும்பத் திரும்பப் பலமுறை அவனை இறைஞ்சி வேண்டிப் பாடினால் உண்மையாகவே அவனது அருள் வெள்ளம் உள்ளத்தில் ஊற்றெடுக்கும். உள்ளமும் இறைவன் ஆலயமாய் விடும்.

கடலில் வாழும் பிராணிகளில் ஒன்றாகிய முத்துச்சிப்பி ஓர் காலத்தில் கடலின் மேலே வந்து வாயைத் திறந்து கொண்டேயிருந்து ஒரு துளி மழைநீர் வாயில் வீழ்ந்ததும் தன் வாயை மூடிக் கடலின் அடிப்பாகத்தே சென்று சஞ்சரிக்குமாம். அந்த ஒரு துளி நீரே காலகெதியில் விலை மதிக்க முடியாத முத்தாக விளைகின்றதாம்.

அதுபோல் நாங்களும் எங்கள் வாழ்நாளில் எத்தனை

கோடி தரம் வாயைத் திறந்து 'ஓம் ஓம்' என்றோ, 'ஓம் நமச்சிவாய' என்றோ கூறுவோமாயின் அத்தனை கோடி முத்துக்கள் விளைந்து ஒன்று சேர்ந்தாற் போன்ற 'ஜீவசக்தி' 'ஜோதிமயம்' நம் உள்ளத்தில் உருவாகி உள்ளம் ஓர் பரப்பிரம்மமாகி விளங்குமன்றோ! இதனாலன்றோ சுந்தரரும்,

"நற்றவா உனை நான் மறக்கினும்
சொல்லு நா நமச்சிவாயவே"

என்று பாடினார். சுந்தரர், அப்பர், சம்பந்தர், மணிவாசகர் உண்மை வழியைக் கண்டறிந்து, பின்னோராகிய எங்களுக்கும் வழி காட்டி முன்னே சென்றனர். அவர் பின்னே செல்லத் தயங்குகின்றோம்.

சுயஒளி இல்லாத இருண்ட உலகமாகிய சந்திரன் சூரியனின் ஒளியைப் பெற்றுப் பிரதி விம்பிக்கிறது. அதுபோல் நாங்களும் பல நூல்களைக் கற்றும், பெரியோர் நற்போதனைகளைக் கேட்டும் சந்திரனைப்போல் பிரதிவிம்பிக்காது, உள்ளத்தினின்றும் ஒளி வீசும் உத்தமர்களாக ஆக வேண்டும்.

★★
★★

## விவேகானந்தரின் வீர கர்ஜனை.

கொள்ளை நோயோ, பஞ்சமோ நிகழுமிடமெங்கும் செல்லுங்கள்; மக்கள் துன்புறும் இடமெங்கும் செல்லுங்கள்; அவர்களுடைய துயரங்களைத் தணியுங்கள். மிக்கது நேருமாயின், அம் முயற்சியில் நீங்கள் இறக்கலாம். அதனால்! என்?

சக்தியும், அதனைய பொருள்களும் தாமே வரும். உன்னை வேலையில் அமர்த்திக் கொள்க. உன்னால் தாங்க அரிதென்று உணரும் அளவிற்கு அத்தகைய மாபெருஞ் சக்தி உன்னிடம் வருவதை நீ காண்பாய்.

# அருட்பா தந்தருளிய அற்புத மனிதர்

- அருள் சத்தியநாதன் -

உலகை உய்வித்த உத்தமர்களை ஈன்று எடுத்த பெருமை பெரும்பான்மையாகக் கீழைத் தேசங்களையே சாரும். இயேசுநாதர், புத்தர், முகம்மது நபி, காந்தியடிகள், இராமகிருஷ்ணர் இவ்வாறு இவ்வுத்தமர்களைப் பெற்றெடுத்த பெருமையை எக்காலமும் கீழைத் தேசங்களே பெற்று வருகின்றன.

இவ்வாறு தெய்வாம்சம் பொருந்திய சீலர்களைப் பெற்று எடுப்பதில், கீழை நாடுகளில், பாரத தேசமே முன்னணி வகித்து வருகிறது. எண்ணற்ற சீலர்களை, தியாகிகளை மனுக்குல வழிகாட்டிகளை பெற்றுஎடுத்து, உலகுக்கு அளித்தது. பழம் பெரும் பாரத புண்ணிய பூமி ஆகும்.

மாறுபட்ட பல நெறிகளில் பிறந்த அவர்கள் வேதாந்தம் என்ற உயர் ஸ்தானத்தில் ஒன்று பட்டு ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற ரீதியில் உலகிற்கு அளித்த ஞானச் செல்வம் இன்று, அகில உலகின் பொதுவேதாந்த தத்துவம் ஆக இந்து வேதாந்தம் விளங்கி வருகின்றது. என்றால், இப்படியானவர்களைப் பெற்ற பாரதம் என்ற ஞான பூமியின் மகத்துவம் தான் என்னே!

'யுகந்தோறும் நான் அவதரிப்பேன்' என்ற கோபாலனின் வாக்கை மெய்ப்பிப்பது போல ஒவ்வொரு நூற்றுண்டும் எக்காலத்திலும் மறக்க இயலாத கருத்துக்களையும், அற்புத வாழ்க்கையினையும் சமைத்திட்ட உத்தமர்களை, அவதார சீலர்களை ஈன்று எடுப்பது பாரத பூமியின் பண்பு ஆகும்.

இந்த 20ம் நூற்றுண்டில் காந்தியடிகளை, சத்தியசாயி பாபாவை, காஞ்சி சுவாமிகளை பெற்று அளித்த பாரதம், தாயுமானவர், குமரகுருபரர் ஆகியவர்களை ஈன்ற பின்பு, 1823ம் ஆண்டு அக்டோபர் மாதம், 5ம் திகதி சுவாமி இராமலிங்கரை இவ்வுலகிற்கு அளித்தது.

திரு அருட்பா செய்தருளிய இவ் அருட்பெரும் ஜோதியைப் பெற்றெடுத்து புண்ணியம் பெற்ற அம்மையின் பெயர் சின்னம்மா. இவர் தந்தை பெயர் ஸ்ரீ ராமையாபிள்ளை என்பதாகும். கால்தூக்கி ஆடும் சிவனையுடைய சிதம்பரத் தருகில் உள்ள மருதூரில் இராமலிங்க சுவாமிகள் பிறந்தார்கள்.

மக்களைக் கைதூக்கி விட வந்த மகான்களின் வாழ்வு, என்றும் துன்பம் நிறைந்ததாகவே இருக்கும். மக்கள் செய்யும் பொறுப்பு அற்ற செயல்களுக்கு, தங்களைத்தாமே வருத்தி, பிராயச்சித்தம் செய்து கொள்கிருர்களோ?

இராமலிங்கம் பிறந்த ஆரும் மாதமே அவரது தந்தை இறைவன் தனக்கு அளித்த பொறுப்பான கடமையை செய்து விட்ட நிம்மதியில், சிவபதம் அடைந்தார். இக் காரணத்தினுல், முறைப்படி எந்த குருவிடமும் அவருக்குக் கல்வி கற்க இயலாமல் போய்விட்டது. ஆனுல், இயற்கையாகவே கவிபாடும் திறமை பெற்றிருந்த அவருக்கு, சிறு வயதிலேயே முருகக்கடவுள் மீது பற்று ஏற்பட்டுவிட்டது. முழு அறிவையும், ஞானத்தையும் அவர் முருகன் மேல் செலுத்தி அவனை வழிபட்டு வந்தார். இதனுல், ஞானக்குழந்தை, ஞானவெளிப்பாட்டை அடைந்து, இராமலிங்க சுவாமிகள் ஆனது. வள்ளலார் என்ற பெயரில் இராமலிங்க சுவாமிகள் மக்களுக்கு அறிமுகம் ஆனுர்.

இவர் கொடுந்தவம் செய்யவில்லை. உடலை வருத்திக் கொண்டு யாகங்கள் புரியவில்லை. சொல் வீரராய் இருக்கவில்லை. உண்மை, உழைப்பு இவையே மனிதன் செய்யக்கூடிய யாகங்கள், நோன்புகள் எனக் கண்டார். ஆயிரம்

பாக்களை உடைய திருஅருட்பாவில் த ம து கருத்துக்களை சொன்னுர். சகோதரத்துவம், மனிதத்தன்மை, அ மை தி உலகை உருவாக்குதல் இவை பற்றியும் மனிதனது கடமை கள் பற்றியும் அருட்பாவில் அவர் பேசினுர். கவிஅரசர் தாகூர், தனது கவிதையொன்றில், 'கடவுள் எங்கே இருக் கிறுர்' என்று கேட்கிறுர்.

அதற்கு அவரே பதில் சொல்கிறுர்: "எங்கே உழவன் கடினமான நிலத்தை சிரமத்துடன் பண்படுத்துகிருனே, பாதை களை சமைப்பதற்காக எங்கு ஒருவன் கற்களை க டி ன மா ன உழைப்புடன் உடைக்கிருனே அங்கே எல்லாம் கடவுள் இருக் கிறுர்'' என்று

உழைப்பில் கடமையில் இறைவன் இருந்து கொண்டே இருக்கிறுன் என்ற தத்துவத்தை, திருஅருட்பாவில் சுவா மிகள் கண்டிருக்கிறுர்கள். மனித சேவையே, மகாதேவன் பூஜை எனக்கண்ட சுவாமி இராமலிங்கர், 1867-ம் ஆண்டு தமிழ் நாட்டின் தென் பகுதியில் ஒரு கிராமத்தில் மனித சேவைக்காக ஒரு கேந்திர (CENTRE) த்தை ஸ் தா பி த் தார். மனேஇயலில் இருந்து, அன்னதானம் வரை மனிதர் களின் துயர்துடைக்கும் பணிகளில் இக்கேந்திரம் இன்றும் பணியாற்றி வருகிறது. சமயபேதமின்றி அனைவரும் இங்கு ஞானவிருந்து பெற்றுச் செல்கிறுர்கள். சாதிபேதம்இன்றி அனைவரும் விருந்து உண்டு மகிழ்கிறுர்கள். தராதர பேதங் கள் இன்றி நோயாளர்கள் பிணி போக்கிச் செல்கிறுர்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, சோதியில் கலந்த வள்ளலின் அருளாசிகளை அமுதமாக அனைவரும் பெற்றுச் செல்லுகி றுர்கள். வள்ளல் வளர்த்த பணி, இன்றும் வ ர ம் பின்றி மனித சேவை செய்கிறது.

இராமலிங்க அடிகள் புகழை விரும்பவில்லை. மகான்கள் தாம் மெழுகைப் போன்றவர்களே; வி ரு ம் பு வா ர் க ளா பெயரையும், புகழையும்? ஒருமுறை, அடிகளை பல புகைப் படப் பிடிப்பாளர்கள் புகைப்படம் பிடிக்க முயற்சி செய்

தார்கள். ஆனால் என்னே ஆச்சரியம்! ஒரு புகைப்படத்திலும் அவர் படம் விழவில்லை!

எந்தச் சடப்பொருளும் காமிராவிற்குத் தப்பமுடியாது! நம் சுவாமிகளோ ஸ்தூல சரீரத்தை உடையவராகத் தோன்றினாலும் ஒளியாகவே சூட்சும சரீரத்தில் வாழ்ந்திருக்கிறார். இதனால்தான் உலகிற்கு ஒளியாக வந்த அவர் ஒளியுடன் ஒன்றிவிட முடிந்திருக்கிறது.

முழு இந்தியாவிற்கும் - ஏன் இந்த குறுகிய எண்ணம்- முழு உலகத்திற்கும் சேவை செய்து, வழிகாட்டியாக, ஒளி விளக்காக, வாழ்ந்த இப்பெரியோன், தன் வாழ்வின் இறுதிப்பணியாக, 1871ல் சத்திய ஞான சபையை நிறுவினார். ஒரு எண்ணெய் விளக்கை ஏற்றி ஏற்படுத்திய சத்திய ஞானசபை இன்று தாமரைப்பூ வடிவில் எழுந்திருக்கிறது. சத்தியஞான சபை இன்று மாறுபட்ட அனைத்து சமயங்களுக்கும் ஒளியாக விளங்குகிறது.

வள்ளலார் ராமலிங்க சுவாமிகள், தான் கொணர்ந்த நற்செய்தியை 1874ம் ஆண்டு தை மாதம் 30ந் திகதி வரை பரப்ப சித்தம் கொண்டிருந்தார். தான் கொணர்ந்த ஞானவிருந்தை உண்டு மகிழுமாறு மக்களை அறைகூவி அழைத்தார். அவரது தெய்வீகக் குரல்கேட்டு, அமெரிக்கா, ரஷ்யா உட்பட பல பிறநாட்டு மக்கள் ஓடோடி வந்தனர், அவர் பாதம் தொழ, பணிபுரிய.

மகான்கள் தாம் எத்தனை விதமாக தமது பூவுலக வாழ்வை முடித்துக் கொள்கின்றனர்! ஷீர்டி சாயிபாபா மகாசமாதி அடைந்தார். ராகவேந்திர சுவாமிகளோ உயிருடன் பிருந்தாவனப் பிரவேசம் செய்தார். இயேசு கிறிஸ்து நாதர் உயிருடன் எடுத்துக் கொள்ளப்பட்டார். ஆனால் நம் சுவாமிகளோ, சோதியில் கலந்து, சோதியானார். எமக்கு வழியானார்.

# ஆத்மஜோதி நிலைய வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1 | திருப்புகழ் பூஜாமலர் | .50 |
| 2 | சமரச ஞானக் கோவை - க. இராமச்சந்திரா | 5.00 |
| 3 | ஆத்மநாதம் - மகரிஷி சுத்தானந்தர் | 3.00 |
| 4 | தீங்கனிச் சோலை - பரமஹம்சதாசன் | 2.50 |
| 5 | சைவ இலக்கிய கதா மஞ்சரி - அருணாசல தேசிகர் | 3.00 |
| 6 | பாட்டாளி பாட்டு - மகரிஷி சுத்தானந்தர் | 1.50 |
| 7 | இளங்கோவின் கனவு - நடராஜன் | 2.25 |
| 8 | ஆத்மஜோதி மலர் | 1.00 |
| 9 | நவராத்திரிப் பாடல் | .50 |
| 10 | கந்தரனுபூதி | .15 |
| 11 | கந்த சஷ்டி கவசம் | .15 |
| 12 | நித்திய கரும விதி | .25 |
| 13 | செல்லச் சந்நிதி பாடல் | .15 |
| 14 | கதிர்காமப் பதிகம் | .25 |
| 15 | மார்கழி மாதப் பாடல் | .20 |
| 16 | பித்துக்குளி முருகதாஸ் பாடல் | .50 |
| 17 | திருநீற்றின் பெருமை | .10 |
| 18 | தருமம் | .20 |
| 19 | சிவானந்தரின் அருளுரைகள் | .60 |
| 20 | இவ்வாறு அருள்கிறார் சிவானந்தர் | .75 |
| 21 | பக்தி | .20 |
| 22 | பௌத்தம் | .20 |
| 23 | பிரமம் | .20 |
| 24 | அவதாரம் | .20 |
| 25 | முக்கிய உபநிஷதங்களின் சாரம் - பாகம் 1-10 | 2.50 |
| 26 | சுவேதாசுவத உபநிஷத விளக்கம் | .50 |
| 27 | சண்முககவசம் | .50 |
| 28 | சகல கலாவல்லி மாலை | .25 |
| 29 | மதுபானம் விளைவிக்கும் மகா நாசம் | 1.00 |
| 30 | ஸ்ரீ சத்ய சாயி கீதம் | 1.00 |

தபாற்செலவு தனி.

வியாபாரிகட்குத் தகுந்த கமிஷன் உண்டு.

**ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி. (இலங்கை)**

Registered at the G.P.O. as a Newspaper M. L. 59/300

# சந்தா நேயர்களுக்கு!

அன்புடையீர்!

இறைவன் திருவருளால் ஆத்மஜோதிக்கு 21 ஆண்டுகள் பூர்த்தியாகி 22வது ஆண்டு ஆரம்பமாகி 11-வது இதழ் வெளிவந்துள்ளது. பல சந்தாநேயர்களுடைய ஆதரவினாலேயே ஜோதி மாதந்தோறும் சுடர்விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. வழக்கம்போல் அன்பர்கள் அனைவரும் இவ்வாண்டுச் சந்தாவை அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். சந்தா நேயர்கள் தமது சந்தா இலக்கங்களைக் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

## ஆத்மஜோதி நிலையம்,

### நாவலப்பிட்டி, (இலங்கை)

அச்சிடுவிப்போர்: ஆத்மஜோதி நிலையத்தினர்
அச்சிடுவோர்: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தினர்
வெளியிட்ட திகதி: 17—9—70